பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

AL 88
Paper Class
வர்த்தகவியல்
திரு ஜெயராமன்
Wed — 4-30 p. m.
Sat } Sun } 8-30 a. m.
நிர்வாகி,
அறிவொளி கல்விக் கழகம்
நல்லூர்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.2-00

A/L 88
பொருளியல்
திரு லோகசிங்கம்
TUE — 9-30 a. m.
THU — 11-30 a. m.
SUN — 1-00 p. m.
O/L 87
மீட்டல் வகுப்புக்களும்
ஆண்டு 5, 6, 7, 8, 9
10, 11 ஆ வகுப்புக்களும்
நடைபெறுகின்றன.

ஏடு: 3 யாழ்ப்பாணம் சிபவ ஆனி 02 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 30 (16 - 6 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 107

★ யுத்த நிறுத்தம் —பேச்சுவார்த்தை

# பிரதமர் ராஜீவ் சொந்த அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும்

## மக்கள் உணர்வுக்கு மதிப்பளிக்கக் கோருகிறார் ஆணையாளர் சீ. வி. கே.

— அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, சொந்த அக்கறை- தனிப்பட்ட கவனம்-செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் நேரடியானதும், வெளிப்படையானதுமான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியவற்றின் மூலம் சமாதானத்தையே தாம் விரும்புவதாகத் தமிழ் மக்கள் வெள்ளைக் கொடித் தினம் மூலம் வெளிப்படுத்திய உணர்வுகளுக்கு, பிரதமர் அவர்கள் மதிப்பளித்துச் செயற்படவேண்டும்.

இவ்வாறு நேற்றைய வெள்ளைக் கொடித் தினத்தை ஏற்பாடு செய்த யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ. வி கே. சிவஞானம் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் சொன்னதாவது:-

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி ஈழத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, தனிப்பட்ட கவனம் செலுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியானதும் வெளிப்படையானதுமான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை: அவற்றின் மூலம் சமாதானம், அமைதி என்பதையே மக்கள் விரும்புகிறார்கள்

நேற்றைய வெள்ளைக் கொடித் தினத்துக்கு மக்கள் காட்டிய ஆதரவு, தாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம் என்பதை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது; ஊர்ஜிதம் செய்துள்ளது

இதனைக் கருத்திற் கொண்டு, பாரதப் பிர

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானம் வேண்டி பாத யாத்திரை

கொழும்பு, ஜூன் 16

திருகோணமலை கோணேஸ்வராலயத்தில் இருந்து சமாதானப்பாத யாத்திரை ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை கதிர்காமம் நோக்கி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்த யாத்திரையை கதிர்காமம் பக்தர்கள் சபை நடத்துகிறது என்று கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

200பேர் கலந்துகொள்ளும் பாதயாத்திரை அடுத்த மாதம் 13ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றும் கலந்து கொண்டார், (ஒ-எ)

## ஜே.ஆர்.மீண்டும் ஜனாதிபதி வேட்பாளர்? திங்களன்று முடிவு தெரியும்

கொழும்பு, ஜூன் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை கூடுகிறது. அன்று சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படுமென்றுதெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் யார் போட்டியிடுவது என்ற விஷயம் அன்று தீர்மானிக்கப்பட இருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தன மூன்றுவது முறையாகவும் போட்டியிடுவது பற்றி அன்று முடிவெடுக்கப்படலாமென்று இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

திரு.ஜெயவர்த்தனவே ஜனாதிபதிவேட்பாளராக மீண்டும் போட்டியிட வேண்டுமென்ற பிரேரணையைக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொண்டுவருவார் என்றும்—

அதை இன்னொரு சிரேஷ்ட உறுப்பினர் ஆதரிப்பார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன (ஒ-எ)

17 மாவட்டங்களில்

## பட்டதாரி ஆசிரியர் அடுத்தமாதம்நியமனம்

கொழும்பு, ஜூன் 16

மட்டக்களப்பு, மன்னார், கல்முனை, பண்டாரவளை, மாத்தளை உட்பட 17 மாவட்டங்களில் உள்ள அரசுப் பாடசாலைகளுக்கு அடுத்த மாதம் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சு இது சம்பந்தமாகத் தீர்மானம் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணிதம், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களைப் படிப்பிப்பதற்கான ஆசிரியர்களே நியமிக்கப்படுவர் என்றும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

16—6—1988
ஆனி 2
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.23 முதல் 8.53 வரை
ராகுகாலம்:
1.23 முதல் 2.53 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கற்கி ஜயந்தி

## மன்னாரில்நடந்த எதிர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஈழப் புரட்சி அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நீதி மறிப்பு மற்றும் எதிர்ப்புப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னாரில் நடைபெற்றது.

காலை 9 மணி தொடக்கம் 11-30 மணி வரை மன்னார் நகரப் பகுதிகளில் இடம்பெற்ற வீதி மறிப்பு மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் பின் 11-30 மணியளவில் மன்னார் பஸ்நிலையத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்பேசும் மக்களின் இன்றைய நெருக்கடிநிலை

(6 ஆம் பக்கம் பார்க்க]

## வெள்ளைக் கொடி தினம் முழு அளவில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ் குடாநாடு எங்கும் நேற்று வெள்ளைக் கொடித்தினம் முழு அளவில் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

நோக்கிய இடமெல்லாம் வெள்ளைக் கொடிகள் அசைந்து ஆடிப் பறந்துகொண்டிருந்தன.

கடைகளில், அலுவலகங்களில், தனியார் நிறுவனங்களில், வீதிகளில், வாகனங்களில், வண்டிகளில் எல்லாம் வெள்ளைக் கொடிகள் எங்குபார்த்தாலும் நீக்கமறத்தெரிந்தவை சமாதானத்தின் சின்னமான வெள்ளைக்கொடிகளே!

அலுவலகங்களுக்குச் சென்றவர்கள், வீதிகளில் சென்றவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என்று வர்க்கபேதமின்றி அனைவரது உடைகளிலும் வெள்ளைப்பட்டிகள்.

உடனடி யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்பனவே இன்றைய தமது தேவை என்பதை தமிழ் மக்கள் — வெள்ளைக் கொடித் தினத்தின் மூலம் — ஏகோபித்த குரலில் நிரூபித்துவிட்டனர்.

யாழ் மாநகர ஆணையாளர் சீ. வி கே. சிவஞானம் விடுத்த வேண்டுகோளைச் சகலதரப்பு மக்களும் ஏற்றுக்கொண்டு வெற்றிகரமாக அனுஷ்டித்துத் தங்கள் ஏகோபித்த உணர்வை வெளிப்படுத்தினர்கள்.

பொது அமைப்புக்கள், ஸ்தாபனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் அனைத்தும் முழு அளவில் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

இதனிடையில் குடாநாட்டைத்தவிர்ந்த வடக்கு, கிழக்கு பகுதிகளின் ஏனைய இடங்களிலும் வெள்ளைக் கொடித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முகாம்களின் முன்னாலும் கொடிகள்

யாழ்ப்பாணம், ஜூன்16

யாழ். நகரில் அமைதிப் படைமுகாம்கள் அமைந்துள்ள வீதிகளின் குறுக்காகவும் வெள்ளைக்கொடிகள் நேற்று பறக்கவிடப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை வெள்ளைப் பட்டி அணிந்துகொண்டு வீதியில் சென்ற இளைஞர்கள் சிலரை, அமைதிப் படையினர் வழிமறித்து "ஏன் வெள்ளைப் பட்டி அணிந்து செல்கின்றீர்கள்? இதன் நோக்கம் என்ன? என்று கேட்டு, அதற்கான விளக்கத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். (ஒ-5)

### முச்சந்தி முரளி



நவம்பர், டிசம்பரிலை அவருக்கு நல்ல காலம் எண்டு சாத்திரிமார் சொன்ன ஞாபகம். அதாலை ஜனாதிபதித்தேர்தலை அந்த மாதங்களிலை வைப்பாரோ யாருக்குத் தெரியும் ...!

## சிவாஜி தலைமையில் நேற்று உண்ணாவிரதம்

சென்னை, ஜூன் 16

தமிழக முன்னேற்ற முன்னணித் தலைவர் சிவாஜி கணேசன் தலைமையில் சுமார் 200 தொண்டர்கள் சென்னை, மரீனா கடற்கரையில் நேற்று ஒன்பது மணிநேர உண்ணாவிரதம் இருந்தனர்.

தமிழக முன்னேற்ற முன்னணியின்செயற்குழு கடந்த 7ஆம் திகதி அவசரமாகக் கூடி, இதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தது தெரிந்ததே

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை உடன் நிறுத்தக் கோரியும்—

ஈழத் தமிழர்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட்சியில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த கோரிக்கையான யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பனவற்றை வலியுறுத்தும் ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) எதிர்ப்புப் போராட்டம் இன்று வடமராட்சியில் நடைபெறும்.

இதற்கான சகல ஒழுங்குகளையும் ஈரோஸ் மேற்கொண்டுள்ளது. (ஒ-10)

## நன்றி சொல்கிறார் ஆணையாளர் சிவஞானம்

யாழ்ப்பாணம் ஜூன் 16

வெள்ளைக் கொடித் தினத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து பொது அமைப்புகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும், சங்கங்களுக்கும் ஆணையாளர் திரு. சிவஞானம் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் நேற்றைய வெள்ளைக்கொடித் தினம் மூலம் தமது சமாதான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர், எனது வேண்டுகோளுக்குப் பொதுமக்கள் பூரண ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

எனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அனைவருக்கும், பொதுஸ்தாபனங்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் சங்கங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று திரு. சிவஞானம் கூறியுள்ளார். [ஒ - 10]

## முல்லைத்தீவு காடுகளில் தொடரும் தேடுதல்!

ஒட்டுசுட்டான், ஜூன்,16

முல்லைத்தீவுப்பகுதிக் காடுகளில் தொடர்ந்தும் இந்திய அமைதிப்படையினர் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

தேடுதலின் போது காட்டுப்பகுதிகளை அண்டியுள்ள கிராம மக்களை, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் அமைதிப் படை ஜவான்கள் கூட்டிச்சென்றனர் என்று புகார் கூறப்படுகிறது.

குறிப்பாக கிராமப் பகுதி வாழ் விவசாயிகள் இப்படி முகாம்களுக்கு கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

முகாம்களுக்குக் கூட்டிச் செல்லப்படுவோரில் சிலர் உடன் விடுவிக்கப்படுகின்றனர். வேறு சிலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (ஒ-113)

## தேர்தலை நடத்தக்கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 16

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை விரைவில் நடத்தக் கோரி நேற்று தமிழகம் முழுவதும் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

திராவிடமுன்னேற்ற கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன கூட்டாக இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்திருந்தன.

மதுரையில் தி. மு க. தலைவர் கருணாநிதி தலைமையில் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-எ)

கோமாரி நோய்க்கு

## தடுப்பு மருந்து வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், யூ 16

வடபகுதியில் கால்நடைகளுக்கு அதிவேகமாகப் பரவிவரும் கோமாரி நோய்க்குரிய தடுப்பு மருந்துகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தன,

இந்தத் தகவலை யாழ் மிருக வைத்தியர் ரீ. வர்ணலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயேதடுப்பு மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஐயாயிரம் கால்நடைகளுக்குப் போதுமான அளவிலேயே கையிருப்பு உள்ளது

இதன் காரணமாக குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உடனடியாகத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளு

(6 ஆம் பக்கம் பார்க்க)

குதூகல ஆரம்பம்
இன்று
(16-06-88 வியாழக்கிழமை காலை 10 மணி)
அனைவரையும் வரவேற்கின்றோம்!

SUN
Video Complex

★ NATIONAL SONY, J V C உபெரா-நவீன துணைக் கருவிகள்சேர் தொழில் நுட்பம்!
★ வண்ணத் தெளிவு - வடிவக் "கலப்பு முறை!"
★ உண்மைக் கலை உணர்வு - உயர்ந்த நற்சேவை!

திருவிழா! - கொண்டாட்டம்!
திருமணம்! - பிறந்தநாள்!
புதுமனை புகுவிழா! பூவையர் புதுவிழா
பொதுவிழா! நலம்பெற படம் பிடிப்பவர்கள்—
சண் வீடியோ கொம்பிளெக்ஸ்
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

SUN VIDEO COMPLEX (4296)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

Lohaman இன சிகப்பு முட்டையிடும் ஒரு நாள் கோழிக்குஞ்சு யூலை மாத முதல் வாரத்தில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யப்படும். விபரங்களுக்கு M. G. M. Forage Stores 208, 1st Cross st. Jaffna. [4218]

நல்ல நிலையிலுள்ள அமெரிக்கன் ஜெனரேற்றர் (300 w) கடைத் தேவைக்குரிய முதிரை கண்ணாடி சோக்கேஸ் [4'-0 X 3' 0 X 2' - 6'] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 'வசந்தி எலெக்றிக்கல்ஸ்' பழைய பொலிஸ் நிலையம் முன்பாக 110, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (4232)

சிறிய திருத்த வேலைகளுடன் கூடிய போட்டோஸ்ரற் இயந்திரம் புதிய மின்சார ஒட்டும் ரான்ஸ் போமர் (Welding Transformer) வயர் கோல்டர் உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். க. தர்மேந்திரன் 'கௌசி வாசா' நுணுவில் மேற்கு சாவகச்சேரி. [4448]

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு மாதத்தில், அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (Lohmann) பிறவுண் சேவல் குஞ்சுகள் 22-06-88 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. No. 9, கந்தையாலேன், [சூராவத்தை றோட்டு] சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [4226]

### தேவை

வெல்டிங் வேலை, கேட் கிறில் வேலை, சுருக்கு கேட் வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. நேரில் வரவும். தாசன் ஹாட்வெயர் 225, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (4231)

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் மகாராஜா ஹோல் செற் நாஷனல் கறுப்பு-வெள்ளை T. V, கசற்றேடியோ, சாப்பாட்டு மேசை, கதிரை கட்டில், சியாஸ்ரா மெத்தைகள் Oven, கம்பளம் 12' X 8' சைஸ். Show-Case கண்ணாடி மேசை, புத்தக அலுமாரி, சிறிய, பெரிய கபேட், Fan மற்றும் பல பொருட்களும் மிக மலிவு விலையில் உண்டு M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (4458)

நல்ல நிலைமையில் கடைக்குரிய இரும்பு சுருக்குக்கேற் கனத்த தகட்டால் செய்யப்பட்டதும் பெரிய வேப்பம் கதவு நிலையும்விற்பனைக்குண்டு. ந-ராஜன் அம்மன் கோவிலடி றங்கநாதன் ஒழுங்கை, தெல்லிப்பழை (4295)

பொமனேறியன் வெள்ளை இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ளவும். K. ஜெயராம் 30 [113] கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (4246)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 10 Sri தொடரிலக்க முடைய மொறிஸ் ஒக்ஸ் போர்ட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். த. அருணகிரிநாதன் 12, ஈஸ்வான் லேன், மட்டக்களப்பு. தொலைபேசி இல. 065/2427 [4244]

### தோட்டக்காணி ஒற்றிக்கு

சுன்னாகத்தில் 25 பரப்பு தோட்டக்காணி ஒற்றிக்குக் கொடுக்க உண்டு. விபரம் எஸ். பீ. சிவஞானம் சட்டத்தரணி இலங்கைவங்கி ஒழுங்கை சுன்னாகம். (4241)

## தேவை

யாழ்நகரில் அமைந்திருக்கும் எமது ஸ்தாபனத்திற்கு தையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. தொடர்பு C/o 231, உதயன் யாழ்ப்பாணம். (4229)

பல் (Denture) வேலை தெரிந்தவர் ஆண் வேலையாள் தேவை. வயதுக் கட்டுப்பாடு இல்லை. யாழ் மாநகர சபைஎல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவத்திற்கு தகுந்த வேதனம் வழங்கப்படும். நேரில் பேசி தீர்மானிக்கலாம் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o 228, உதயன் யாழ்ப்பாணம். (4200)

வீடியோ திரைப்படத்துடன் கசெற் நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு விநாயகர் வீடியோ ஓடியோ சென்ரர் மாகியப்பிட்டி சரவணபவன் ஜெயந்தனுடன் தொடர்புகொள்ளவும். (4237)

சிங்கப்பூரில் கட்டிடப் பகுதிக்கு வேலையாட்கள் 30 பேர் உடனடியாகத் தேவை Work Permit உடன் ஒரு வழிப்பயணம் விபரம் நேரில். தொடர்பு Mrs P Danial Sivasthan Mallakam 4247)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து Msc குருகுல மணமகனுக்கு நல்ல உயரமுள்ள வெள்ளாளர் அல்லாத பட்டதாரி மணமகள் தேவை. எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். யாழ்ப்பாணம். (4454)

கனடாவில் பலவருடமாக வேலைசெய்யும் 32 வயதுள்ள யாழ்ப்பாண கத்தோலிக்க மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகிறார்கள் விண்ணப்பிக்கவும். மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும் C/o 162 உதயன். (4451)

### மணமக்கள் தேவையா?

யாழ்ப்பாண இந்து வேளாள அரசாங்க உத்தியோக மணப்பெண்ணுக்கு 28- 35 வயதிற்கிடைப்பட்ட குறைந்தது பட்டதாரி மணமகன் தேவை. யாழ்ப்பாண விஸ்வகுல ஆசிரியைக்கு 30-40 வயதிற்கிடைப்பட்ட மணமகன் தேவை. இந்துவேளாள Bsc Civil Engineer 35 வயதிற்கு உட்பட்ட டொக்ரர் மணப்பெண் தேவை. எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள் விண்ணப்பிக்கவும் மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [4452]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & —Co Shabra அருகாமையில் (C 5300)

### காணவில்லை

சேனாதிராஜா குலேந்திரராஜா ஆகிய எனது 631441556V அடையாள அட்டையை ஸ்ரான்லி வீதியில் தவற விட்டு விட்டேன் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருப்பதி ஸ்ரோஸ் செட்டித்தெரு நல்லூர் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (4459)

### வகுப்புக்கள்

I. C. M A. / A.A.T/ I A. B/ Computer Programming வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன School of Business Administration 16, 3 ஆம் குறுக்குத்தெரு (O L. R. தேவாலயத்திற்கு மேற்கு பக்கம்) யாழ்ப்பாணம். (C5468)

Radio-TV, Air Conditioning-Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டர்மெக்கானிசம், வைண்டிங், பிளம்பிங், Typing புதியபிரிவுகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall. 328 நாவலர்றோட் [ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம். (4225)

108 Brown Road, Jaffna. A/L 88 வெப்ப இரசாயனம் ஆரம்பம் [17-06-88] வெள்ளி மாலை 4 30 p m ஆசிரியர். சத்தீஸ் இவ்வாசிரியரின் வெப்ப இரசாயன நூல் வெளி வந்து விட்டது. (4227

### ஒரு நாள் குஞ்சு விநியோகம்

எல்லா இன கோழிக் குஞ்சுகள் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் விநியோகிக்கப்படும். உடன் பதிவு செய்க. தொடர்பு: விநோத் ஏஜென்சி37/4, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். (மஸ் ன்கம்பனி அருகில்) (4238)

### ராதையின் நெஞ்சம்

தீக்குள் விரலை வைத்தால் நாவலாசிரியர் K S ஆனந்தன் எழுதிய ''ராதையின் நெஞ்சம்'' காதல், சோகம், மர்மம், அத்தனையும் நிறைந்த புதுமையான நாவல் 200 பக்கங்கள் 30/- செங்கை ஆழியான் எழுதிய உண்மைக் கதை மழைக்காலம் 20/-ரூபா, பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம், விரைவில் வெளிவருகிறது பூம்பனிமலர்கள், கானகத்தின் கானம் (4240)

### தவறிவிட்டது

கன்னாதிட்டி காளி கோவிலுக்கும் இலுப்பையடிசந்திக்கும் இடையில் ஒரு திறப்புக் கோர்வை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் விளம்பர பகுதியில் ஒப்படைக்கவும் (4245)

13. 6. 88 அன்று ஸ்ரான்லி வீதியில் இல. 002515 காசோலையும், அடையாள அட்டை இல: 601153637 V தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 449, ஸ்ரான்லி வீதி, என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4243)

# கொம்பியூட்டர் பயிற்சி

## தெல்லிப்பளையில்!!

Diploma in Computer Programming&DataProcessing in BASIC & COBOL

Course இற்கான புதிய 2-ம் பிரிவு ஆரம்பமாகிறது!

**17-06-1988 (9-00 a.m.)**

- WEEK END & WEEK DAY பிரிவுகள் தனித்தனியாக இயங்கும்.
- தனிப்பட்ட கவனமெடுப்பதால் ஒரு பிரிவில் 12 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- சேரும்போது செலுத்தவேண்டியது Rs. 400/- மட்டுமே.

# IDP

**Institute of Data Processing**

K.K S.Road — (துர்க்கை அம்மன்கோவிலடி)

தெல்லிப்பளை.

(C/5451)

## புதியதோர் சேவை அறிமுகம்

★ அரச தனியார் அலுவலகங்கள், நிறுவனங்களின் தேவைக்கும் விருப்பிற்கும் ஏற்ற அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

★ தேசிய அடையாள அட்டையின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பிளாஸ்ரிக் வெளிக் கவர் அமைக்கவும்.

★ போட்டோக்கள், படங்களை எல்லா அளவுகளிலும் பிளாஸ்ரிக் கவர் செய்து கொள்ளவும்

★ உறுதி, பிறப்புச் சான்றுப் பத்திரங்கள் மோட்டார் ரைக்ஸ் (Tax) இன்சூரன்ஸ் பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்களைப் பேணும் பிளாஸ்ரிக் கவர் செய்யவும்.

நீங்கள் நாடுமிடம்:

## கிளீன் - கட்

239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ உங்கள் திருப்தியே எங்கள் சேவை! ★

(C-5466)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



### திரு. கதிரேசு நவரத்தினம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1933-7-22 | 1988-5-17 |

சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்டு வவுனியா குட்செட் றோட்டை வசிப்பிடமாக கொண்ட எமது குடும்பத்தவரின் வீட்டு கிரியைகள் 16-6-88 இன்று எமது ரஞ்சினி வாசா இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் பங்கு கொண்டு எமது குடும்ப குல விளக்கின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கு எமது குடும்பத்தார் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறோம்,

உங்கள் பிரிவால் துயரும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்கள்,
பெருமக்கள், மருமக்கள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (4604)

## நினைவஞ்சலி





### திரு. திருமதி பெரியதம்பி கந்தையா

(சிவலிங்கப்புளியடி)

(10-06-07 — 16-06-86) (22-08-17—28-05-85)

அம்மையே அப்பா! எனது இழப்புக்கும் தாழ்வுக்கும் யாரின் காரணம்.

[illegible] தர வாரா

718, கே. கே. எஸ். வீதி, P. K. பாலசிங்கம்.
சங்கிலியா வளவு யாழ்ப்பாணம். [4609]

## காணவில்லை




புங்குடுதீவைச் சேர்ந்த சதாசிவம் தவச்செல்வம் (முருகையா கனகசபை வயது 23) திருநாவுக்கரசு விவேகானந்தன் (வயது 22) ஆகிய இவர்கள் பருத்தித்துறைக்கு 15 - 5 - 88 அன்று சென்றவர்கள் இன்னும் வீடுதிரும்பவில்லை. இவர்களைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் எமக்கு அறியத் தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தவச் செல்வத்தின் பிரிவால் வாடித் துயருறும்.

அன்புள்ள தாய், சகோதரர்கள்
சின்னத்துரை
''குமரபதி''
புங்குடுதீவு - 10

(4460)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருந்திய அழைப்பும்



அமரர்

### ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலம் (முருகா)

(பிரபல வர்த்தகர்)

வங்களாவடி
வேலணை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 02-04-1908 | 18-05-1988 |

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம் இல்லத்தின் குல விளக்காயிருந்து இதயத்தின் ஒளி விளக்காய் இருக்கும் எம் தெய்வமே!

உங்கள் ஆத்மாசாந்தியடைய எந்நாளும் இறைவனை வேண்டுகிறோம்.

16-05-88 வியாழக்கிழமை காலை 6 00 மணிக்கு அந்தியேட்டிக் கிரியையும் 17-06-88 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வீட்டுக் கிருத்தியமும் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இறுதிக் கிரியைகளில் கலந்து எம் கவலையில் பங்கு கொண்டவர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பிய அன்பர்கட்கும், எல்லா வகையிலும் உதவிநல்கிய அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

அன்பு மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

'முருகா இல்லம்'
வங்களாவடி,
வேலணை. (C/ 5474)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு

## இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி உதவி

கொழும்பு, ஜூன் 16

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அரசு அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் ஆகியனவற்றைப் புனரமைக்க இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி 60 லட்சம் ரூபாவை இலங்கை அரசுக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

சேதங்களைப் பார்வையிட வங்கியின் இரண்டு அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர்.

ஜனாப் முகமட் காதர் அல்வான், ஜனாப் ஹுசேன் அல்புனி ஆகிய வங்கி அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் எம். எச். முஹம்மதுவைச் சந்தித்துப் பேசினர்.

பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து அரசு அதிபர்களையும் அவர்கள் சந்தித்தனர்.

பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் புனரமைப்பதற்கு முதலிடம் அளிக்கும்படி இவ்வங்கி அதிகாரிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சைக் கேட்டுள்ளனர்.

இஸ்லாமிய வங்கி அளித்த பணத்தைக்கொண்டு செய்யும் புனரமைப்பு வேலைகள் இவ்வார முடிவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

# தமிழ்க் கைதிகள்

## விடுவிப்பது நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 16

அமைதி உடன்பாட்டின் கீழ் தமிழ்க் கைதிகளை விடுவிப்பது தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

சட்ட மா அதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் இப்படித் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

குற்றப் பத்திரிகைகள் தயாரிக்கப்பட்டுள்ளவர்கள் மீதான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் —

குற்றம் சுமத்தப்படாதவர்கள் குறித்து இரகசியப் பொலிஸ் திணைக்களத்துக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் அறிவிக்கப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

இதனிடையில் பூஸா தடுப்பு முகாமில் உள்ள தமிழ்க் கைதிகளின் குழு ஒன்று, தங்களைப் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுதலைசெய்யும்படி கோரும் மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-உ-ஏ)

## நீதிபுரத்தில் வீடுகள் கையளிப்பு

நெடுந்தீவு, ஜூன், 16

மாங்குளம் நீதிபுரம் குடியிருப்புத் திட்டத்தில தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 வீடுகளை அமைத்து வீடற்ற மக்களுக்கு வழங்கியது.

அருட்திரு ம. எஸ். தியாகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீன பேராயர் அருட்திரு ம. ஜே. அம்பலவாணர் வீடுகளை கையளித்தார். (இ-111)

## ஆலய வழிபடுவோர் கூட்டம்

கொக்குவில் - நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் ஆலய முன்றலில நடைபெறும் [இ-5]

## கோமாரி ஆபத்து:

# அழிக்கப்படும்

## மாடுகளுக்கு நஷ்டஈடு!

யாழ்ப்பாணம், ஜூன். 16

கோமாரி நோய் எனக் காணப்படும் மாடுகள் கால்நடை உற்பத்தித் சுகாதாரத் திணைக்களத்தினரால் அழிக்கப்பட்டால், அவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

இந்த அறிவித்தலை வட பிராந்திய கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் விடுத்துள்ளார்.

நோயின் காரணமாக அழிக்கப்படும் மாடுகளுக்கு ஒரு கிலோவுக்கு 6ரூ. 50 சதவீதம் நஷ்டஈடு வழங்கப்படும்.

தங்கள் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் காணப்படின் மக்கள் உடனடியாக அண்மையில் உள்ள கால்நடை வைத்தியர்களுக்கு தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்டி கால்நடை நோய்த் தடுப்பு அலுவலகத்திலிருந்து விசேட உத்தியோகத்தர் ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் இன்று வரும்பொழுது கோமாரி நோய்த்தடுப்பு மருந்துகளையும் எடுத்துவர உள்ளார்.

இவர் இங்கு தங்கி இருந்து நோய் பற்றிய ஆய்வுகளையும், பரிசோதனைகளையும் மேற்கொள்ள உள்ளார். (ஒ-9-10)

## வெறிச்சோடியது

வடமாராட்சி, ஜூன். 16

கடந்த திங்கட்கிழமை நண்பகலின் பின்னர் பருத்தித்துறை நகரம் வெறிச்சோடியது.

சிவன் கோவிலடிப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைதிப்படையினர் பொது மக்களைப் பிடித்து இருத்தியும், முகமூடிகளின் முன் ஆஜர் செய்ததைத் தொடர்ந்துமே இந்த நிலை ஏற்பட்டது. (ஒ-160)

## மானிப்பாய் மெமோறியல் ஆண்டுவிழா

மானிப்பாய், ஜூன் 16

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தின் 153ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 17ஆம் திகதி வித்தியாலய அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

இந்து, கிறிஸ்தவ முஸ்லிம் சமயக் குருவானவர்கள் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவர். (இ-90)


**AL 89**

விஞ்ஞான மாணவர்களுக்கு
வெப்ப இரசாயனம்

பிரிவு I ஆரம்பம்: 18 - 06 - 88
Sat - Sun 10 30 . A m

பிரிவு II ஆரம்பம் 19 - 06 88
Sat - Sun 1 30 p m

3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

பிரிவு III ஆரம்பம்: 19 - 06 - 88
Sat - Sun 4 p m

ஆசிரியர்
திரு. நாகரெட்ணம் [B.sc]

மணல்தரை லேன்,
கந்தர்மடம்.

(C/5457)

T. இந்திரநாதன்
**M Three Travels**
அளிக்கும்

# மத்திய கிழக்கு

## ★ வேலை வாய்ப்பு ★

எமது சேவை தூய்மையானது துரிதமானது

● உடனடி பிரயாண வாய்ப்புக்கள்

* வைகாசி முற்பகுதியில் கடவுச் சீட்டு தந்த 80 பேர் 2-6-88ல் பிரயாணம் செய்துவிட்டார்கள்.
* 23-5-88ன் பின் கடவுச்சீட்டு தந்தவர்கள் 8-6-88, 10-6-88ல் 52பேர் பிரயாணம் செய்து விட்டார்கள்.
* என்னிடம் கடவுச் சீட்டுத் தந்தவர்கள் 43 பேர் இன்னும் 2 கிழமைகளில் பிரயாணம் செய்யப் போகிறார்கள்.
* கீழ்க்காணும் வேலை வாய்ப்புகள் தற்சமயம் என்னிடம் உண்டு. உடனடியாக கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு முன்பக்கப் பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். 2 கிழமைகளில் பிரயாணம். எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.

[I] சவூதி அரேபியா

[1] பராமரிப்பு கிளீனேர்ஸ் [Maintenance Cleaners] } 550 றியால்
[2] கிளீனிங் கூலியாட்கள் [Cleaning Labourers } 500 றியால்
[3] கனரக வாகன சாரதிகள் Equipment Drivers } 800 றியால்

21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
OPEN VISA [திறந்த விசா]

[1] விவசாய மேற்பார்வையாளர் (Agricultural Supervisers) }
விவசாய கூலியாட்கள் (Agriculturial Labourers } 500 றியால்

(25 வயதுக்கு மேற்பட்டவர்கள்)

[II] குவைற் (Kuwait)
பொது கிளீனேர்ஸ்

[III] மத்திய கிழக்கு நாடுகளுக்கு
House Maids
[பணிப்பெண்கள்]

உங்களுக்கு சேவை செய்ய
திரு. T. இந்திரநாதன்
காத்திருக்கிறார்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
T. இந்திரநாதன்
**M Three Travels**
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி:- 763, 764, 769.

[C-5442]

## சவூதியில் வெற்றிடம்

ரைப் செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் முழுப்பிரதி விபரங்களுடனும் ஒரு புகைப்படத்துடனும் இம்மாதம் 20 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வேலை விபரங்கள்:

| | | |
|---|---|---|
| எலெக்றிக்கல் என்ஜினியர் | 4 | Degree + 5 - 7 வருட அனுபவம் சம்பளம் 2000 றியால்ஸ் |
| எயர் கொன்டிசன என்ஜினியர் | 4 | |
| சிவில் என்ஜினியர் | 3 | |
| ரெலிபோன் நெற்வேக் என்ஜினியர் | 2 | |
| எலெக்ரோனிக் என்ஜினியர் | 4 | |
| அகிறிக்கல்ஷர் என்ஜினியர் | 2 | 1500 றியால்ஸ் |

அகிறிக்கல்ஷர் 2 ரெக்னிசியன் டிப்பிளோமா.
800 றியால்ஸ் (5 வருட அனுபவம்)

இலவச உணவு இருப்பிடவசதியுடன் 2 வருட ஒப்பந்தம்

# எம். கே. எஸ்

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்

[C5464]

## அண்ணா தயாரிப்புகள்!!!

உங்கள் வீட்டுப் பாவிப்பிற்கு உகந்ததும், சுத்தமானதும், சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டதுமான அண்ணா தயாரிப்புகளை வாங்கிப் பாவித்துப் பயன் பெறுங்கள்.

* கறி மிளகாய்த்தூள்
* தனி மிளகாய்த்தூள்
* மல்லித்தூள்
* நற்சீரகத்தூள்
* பெருஞ்சீரகத்தூள்
* மஞ்சள் தூள்
* அரிசிமா (பச்சை, வறுத்தது)
* கடலைமா

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:-

# அண்ணா கோப்பிக் கடை

யாழ்ப்பாணம்

தலைமையகம்:
அண்ணா தொழிலகம்
இணுவில்

(C 5469)

## INDIAN EXAM

ஆங்கில மருந்துவ பட்டப் படிப்பு
(L. M. M)
(இந்திய மத்திய அரசின் அனுமதி இல: 4-6170 M P T, 24 11.1972 G. O)
(G. C. E O/L சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

இந்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட ஆங்கில வைத்திய டிப்ளோமா பயிற்சிகள் தபால் மூலம் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்கட்கும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்
சாயி மெடிக்கல் அக்கடமி
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.

(4279)

## பூநகரி ப.நோ.கூ. சங்கம்
### கேள்வி கோரல்
# வெற்றுச் சாக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவு சாக்கு | 67 கிலோ | 113[illegible] |
| 2. | மாவு சாக்கு | 55 கிலோ | 2[illegible] |
| 3. | அரிசி சாக்கு | 67 கிலோ | 127[illegible] |
| 4 | நீல கோடன் | 90 " நீலகோடு | 10[illegible] |
| 5. | சீனி சாக்கு | 50 " | 322 |
| 6 | அரிசிச் சாக்கு | 50 " | 20[illegible] |
| 7 | பி எம் பீ அரிசி சாக்கு | | 32[illegible] |
| 8 | கழிவு சாக்கு | | 591 |
| | | | 518[illegible] |

மேற்காண் விபரப்படியுள்ள வெற்றுச் சாக்குகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. வெற்றுச் சாக்குகளை பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம். திரும்பப்பெறக்கூடிய வைப்புப் பணம் ரூபா 500/- காரியாலயத்தில் செலுத்தப்பட்டு விண்ணப்பத்தில் பற்றுச் சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 20 06 1988.

இங்ஙனம்
பொது முகாமையாளர்.

[C-5444]

# டுபாய்

## அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

பின்வரும் இடங்களுக்கு தகுதியானவர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள்

| | | No | | |
|---|---|---|---|---|
| (1) | எலெக்றிகல் என்ஜினியர் | 2 | 900 | US$ |
| (2) | எலெக்றிக்கல் மேற்பார்வையாளர் | 1 | 400 | .. |
| (3) | தச்சுவேலை மேற்பார்வையாளர் | 2 | 400 | .. |
| (4) | கம்பி வளைப்பு மேற்பார்வையாளர் | 2 | 400 | .. |
| (5) | கம்பி வளைப்போர் | 5 | 250 | .. |
| (6) | உதவி கம்பி வளைப்போர் | 10 | 175 | .. |
| (7) | வீட்மான் லேபர் போமன் | 2 | 250 | .. |
| (8) | உதவி வீட்மான் | 10 | 200 | .. |
| (9) | எலெக்றிசியன் | 4 | 250 | .. |
| (10) | உதவி எலெக்றிசியன் | 5 | 200 | .. |
| (11) | பிளம்பர் | 4 | 250 | .. |
| (12) | வெல்டர் | 2 | 250 | .. |
| (13) | பெயின்றர் | 5 | 250 | . |

உடன் கொழும்பு செல்ல வேண்டியிருப்பதால், உடன் தொடர்பு கொள்ளவும்.

## குவைற்

| | | No | |
|---|---|---|---|
| [1] | H V D. - ட்றைவர் - லைசென்ஸ் | 15 | 65 K.D |
| [2] | L. V D. - ட்றைவர் - .. .. லைசென்ஸ் இல்லாதவர்களும் கருதப்படுவர் | 15 | 50 K.D |
| [3] | கட்டட வேலையாட்கள் (மேசன், தச்சுவேலையாளர், கம்பிகட்டுவோர்) | 100 | 65 K.D |
| [4] | பிளம்பர் | 10 | 65 K.D |
| [5] | கார் மெக்கானிக்குகள் (டீசல், பெற்றோல்) | 5 | 70 K.D |
| [6] | வாகன எலெக்றிசியன் | 10 | 70 K.D |
| [7] | ஸ்பிறே பெயின்ரேஸ் | 10 | 70 K.D |
| [8] | கிளீனேஸ் | 100 | 35 K.D |

## HOUSE MAID

| | | No. | |
|---|---|---|---|
| (1) | சிங்கப்பூர் | 50 | 200 D |
| (2) | குவைத | 25 | 40 K.D |
| (3) | சவுதி | 25 | 400 S.R |
| (4) | அபுதாபி | 25 | 400 D R |

உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

K. லிங்கம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செல்வம்
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

(C- 5456)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படவரைஞர் தேவை

எமது நிறுவனத்திற்கு படவரைஞர் தேவை. CARTOGRAPHER விரும்பத்தக்கது. அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 25. 06 88க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

ஆய்வுநிறுவனம்,
81/1 காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(4293)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



நடனசிகாமணி பாக்கியலிங்கம்
[வீரவேங்கை கேப்டன் அலன்]

மண்ணில் பிறப்பு: 06-05 1962
விண்ணில் கலப்பு: 26-05-1987
திதி: 13-06-1988

உன் பிரிவால் வாடும்: வ இ. நடனசிகாமணி இரத்தினேஸ்வரி குடும்பத்தார்.
அம்மன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(4265)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உயர் திரு.
நாகமுத்து செல்லையா
[இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் மானிப்பாய்]

ஊரார் போற்ற உத்தமனாய் வாழ்ந்திருந்து எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பு மொழி பேசி எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே. விலைமதிப்பில்லா மாணிக்கமே எங்கள் ஆசை பப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்று ஐந்து ஆண்டுகள் முடிந்து விட்டது எத்தனை ஆண்டாயினும் உங்கள் அன்பு நினைவுகள் என்றும் எம் உள்ளத்தை விட்டகலாது. எங்கள் ஆசை பப்பா எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளி வீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் அன்பு பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை

"லக்சுமி இரி"
கனகசபை ரோட், மானிப்பாய்

(4280)

## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
28-11-1905

மறைவு
12-7-1983

திரு. இராஜசிங்கம் செல்லையா
(R செல்லையா)

அன்பு மறவா
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
8 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

(4254)

அடுத்த மாதம் ஆரம்பமாக இருக்கும்

# ஜி. சி. ஈ. பரீட்சைக்கான ஏற்பாடுகள் துரிதம்

மானிப்பாய், ஜூன் 16

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஒழுங்குகளை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குனர்களுக்கான கடிதங்கள் வட்டாரக் கல்வி அதிகாரிகள் மூலமாக வழங்கப்பட்டுவருகின்றன.

ஜூலை முதலாம் திகதி முதல் பதினோராம் திகதி வரை நடைபெறும் இப்பரீட்சை நடைபெறும் பாடசாலைகள், அக்காலப் பகுதியில் மூடப்பட்டிருக்கும்.

இந்நாட்களுக்கான பதில் பாடசாலைகள் பின் ஒரு தினத்தில் நடத்தப்படும்.

பரீட்சை நடைபெறாத பாடசாலைகள் தொடர்ந்து வகுப்புக்களை நடத்த வேண்டும்.

பரீட்சையில் கலந்து கொள்ளும் நோக்குனரான ஆசிரியர்களுக்குக் கடமை லீவு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திரு. வி. சபாநாயகம் இதனை அறிவித்துள்ளார். (இ-90)

## நிரந்தர அதிபர்களாக நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 16

யாழ் மாவட்டத்திலுள்ள அநேக பாடசாலைகளில் நிரந்தமான அதிபர்கள் இல்லை.

எனவே வெற்றிடங்களுக்கு 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தேறியோர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை நிரந்தர அதிபர்களாக நியமிக்கவும்.

அதிபர் நியமனங்களுக்கான எழுத்துப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் சித்தி அடைந்து நீண்டகாலமாக காத்திருக்கும் ஆசிரியர்கள் மேற்கண்டவாறு கூட்டாக கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

நாலாம், ஐந்தாம் தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைந்தும், 1979 ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சையில் சித்தி அடைந்தும் அதிபர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. 1980ஆம் ஆண்டு முதல் பதில் அதிபர்களாக குறுகிய கால சேவையாற்றியவர்களுக்கு 1982இல் 4 ஆம் தர அதிபர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதே சமயம் நீண்ட காலமாக 5 ஆம் தர அதிபர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு 4 ஆம் தர அதிபர் பதவி இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் அவர்கள் பரீட்சைகள் சிலவற்றுக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளனர் எனவும் மேற்படி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## வேலணையில் விவசாய ஓய்வூதியத்திட்டம்

வேலணை, ஜூன் 16

வேலணைகமத்தொழில் சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் வேலணை கமத் தொழில் சேவைநிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கமத் தொழில் காப்புறுதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு இத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அங்குரார்ப்பண வைபவத்தில் வேலணை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. நா. குழந்தைவேல், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் பங்குபெறும் ஓய்வூதியர்கள் போன்ற பலர் கலந்து கொண்டனர். [இ-157]

## திருமுறை இசைப் போட்டி

ஊர்காவற்றுறை, ஜூன் 16

கரம்பன் குருமடஸ்தாபகரின் வெளியீடான "தமிழ்வேதபாராயணம்" என்ற நூலிலுள்ள திருமுறைப் பாடல்களை மாணவரிடையே பிரபலப்படுத்தும் நோக்கமாகத் தீவுப் பகுதிப் பாடசாலைகளுக்கென பண், இசை, மனனப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

## "யுத்தநிறுத்தமும் பேச்சுவார்த்தையும் செயல்வடிவம் பெறவேண்டும்"

யாழ்ப்பாணம், ஜூன். 16

யுத்தநிறுத்தமும், பேச்சுவார்த்தையும் உடனடியாகச் செயல் வடிவம் பெறவேண்டும்.

இவ்வாறு தமிழர் முன்னேற்றக்கழக உபதலைவர் திரு. ப. இராசரத்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகோபித்த வேண்டுதலாகிய யுத்த நிறுத்தமும், பேச்சுவார்த்தையும் உடனடியாக செயல்வடிவம் பெற வேண்டும்.

இந்தியப் பிரதமர் கூறியவாறு தமிழ் மக்களுக்கு தங்களைத்தாமே ஆளும் உரிமை கொடுப்பதனில் அதை இருதய சுத்தியுடன் செயலில் காட்டவேண்டும். சொல்லில் மட்டும் நின்றுவிடக் கூடாது.

சிரியாவில், பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாண தேர்தல் விரைவில் நடக்குமென்றும் அங்கே சகல இன மக்களும் வாழ்க்கையை சுமுகமாக அமைத்துக் கொள்ளும் சூழ்நிலை விரைவில உருவாகும் என்றும் கூறியுள்ளார். இது நடைமுறையில் சாத்தியமாகுமா என்பதே கேள்வி.

இலங்கை அரசியல் யாப்புசிங்களமக்களுக்கே ஏற்றது. ஏனைய சிறுபான்மை மக்களுக்கு ஏற்றதல்ல. அவர்களின் உரிமைகளை அது வழங்கவில்லை இதை இந்தியப் பிரதமர் சரியாக விளங்கிகொள்ளவேண்டும்.

இந்தியா ஒருநடுநிலைமைநாடு. அது அந்தத் தன்மையை மாற்றிக்கொள்ளக்கூடாது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாடகம்

கொடிகாமம், ஜூன் 16

மந்துவில் கேலந்து அம்மன் கோவில் திருப்பணி நிதிக்காக அவ்வூர் பக்தர்களால் "சத்தியவான் சாவித்திரி நாடகம்" மேடையேற்றப்பட்டது.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. செ. நவநாயகம்தலைமை [illegible] (இ-75)

## தமிழ் மன்ற அங்குரார்ப்பண விழா

உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் தமிழ் மன்ற அங்குரார்ப்பண விழா அடுத்த வாரம் நடைபெற உள்ளது.

இவ் விழாவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு சிவலிங்கராசா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

தொடர் கல்வி நிறுவன இயக்குநர் செல்வி ஆர். ரி. மான் ஆசியுரை வழங்குவார். (இ-90)

## கடலுக்கு பலி!

தாளையடி, ஜூன் 16

கடலில் பகல்நேரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் கடலில் மூழ்கி மரணமானார்.

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை என்னும் இடத்தில் கணேசபிள்ளை ஆனந்த நடராசா என்பவரே கடலில் மூழ்கி மரணமானவராவார். (ஒ-144)

## யுவதி காயமுற்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நாவற்குழியில் யுவதி ஒருவர் இனந்தெரியாதோரினால் சுடப்பட்டார்.

திருநாவுக்கரசு ஜீவஜோதி (18 வயது) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்த பிரஸ்தாப யுவதி இப்போது யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-10)


## Ecalom Tuition Centre
(மனோகராச் சந்தி)

## '89' புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிவிட்டன

இந்துநாகரீகம்
திருமதி அருள்நங்கை
சனி, ஞாயிறு காலை 7-00 மணி

கணக்கியல்
திரு. சௌந்தி
சனி, ஞாயிறு காலை 7-00 மணி

பொருளியல் பிரிவு III
திரு. உதயன்
சனி மாலை 5-15, ஞாயிறு காலை 6-00
வெள்ளி மாலை 3-00 மணிக்கு.

உடன் தொடர்பு கொள்ளவும்.
(4282)

## ஈழம் வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி!!

சென்னைமவுண்ட்ரோட்புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்ஸில் அமைந்துள்ள

## சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

நிறுவனத்தார்
யாழ் மக்கள் நன்மைகருதி இப்போது 24/1 இல் சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் கிளை ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள்.

★ சத்திய சாயிபாபாவின் நேரடித்தரிசனம் பெறவிரும்புகின்றீர்களா? நேரடித்தரிசனமும், ஆசீர்வாதமும் பெற்ற பின்! புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பம் அளிக்கின்றார்கள்.

★ CANADA செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்படும்.

## சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

24/1 பெரியகடை வீதி
பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(அலோசியஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அருகில்)

தலைமை அலுவலகம்:
சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்
33, 1ம் மாடியில் ஜெமினி ஸ்ருடியோ
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
602 மவுண்ரோட்,
சென்னை 6006
தமிழ்நாடு.
தொலைபேசி: 475382. (C-5424)


## விளையாட்டரங்கு

## கோப்பாய் கொத்தணி பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன். 16

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறும்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும். இப்போட்டிக்கு கோப்பாய் கொத்தணி அதிபர் திரு. பு. க. இராசரத்தினம் தலைமை வகிப்பார்.

யாழ்ப்பாண பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி பிரதம அதிதியாகக்கலந்து கொள்வார். (இ-க-72)

## தூய ஒளி கிண்ணம் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்கு

குருநகர், ஜூன் 16

'தூய ஒளி' வெற்றிக் கிண்ணத்துக்காக குருநகர், விளையாட்டரங்கில் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்-முஸ்லிம் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டி யாழ்-மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டது.

இறுதி ஆட்டத்தில் மோதிய யாழ் - முஸ்லிம் விளையாட்டுக் கழகம், யாழ்-கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகத்தை 'பெனல்டி' முறையில் ஒரு கோல் போட்டு வென்றது.

இரு கோஷ்டிகளும் சுறுசுறுப்பாக விளையாடி தலா இரு கோல்களைப் போட்டு இருந்ததை அடுத்து தலா ஐந்து 'பெனல்டி'கள் வழங்கப்பட்டன.

ஐந்து 'பெனல்டி'கள் அடிக்கப்பட்டும் வெற்றி தோல்வியை எந்தக் கோஷ்டியும் அடைந்திராததைத் தொடர்ந்து மேலும் 'பெனல்டி'கள் வழங்கப்பட்டதில் ஒரு கோல் போட்டு யாழ்-முஸ்லிம் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

'தூய ஒளி' வெற்றிக் கிண்ணத்தை குருசைப்பர் விளையாட்டுக் கழகம் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

மேற்படி போட்டிகளுக்கு திருவாளர்கள்; ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை, எம். பிரான்ஸிஸ் எம். கே. விமலதாஸ், அந்தோனிப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

பிரதம அதிதி டாக்டர், ஏ. எல். ஏபிரகாம் பரிசில் வழங்கினர்.

உள்ளூர் சமூகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் இளம் புலிகள் விளையாட்டுக் கழகம். இளம் சிங்கம் விளையாட்டுக் கழகத்தை இரண்டு கோல்கள் போட்டுவென்றது. [இ-51]

## 2 வது ஆண்டு நினைவஞ்சலி



ஞானானந்தம் டிலானி
[தவம்]

ஆண்டவன் படைப்பு; 25 5-83
அநியாய அழிப்பு; 16 06-86

அன்பின் பிறப்பிடமே எங்கள்
ஆருயிர் மழலையே
அகால மரணம் அணைத்திட்ட சுடர்
விளக்கே
ஆண்டிரண்டு சென்றிடினும்
ஆறிடுமோ எம்மனமும்
நீண்டுவரும் எம் நினைவில்
நீங்கிடுமோ உன் உருவம்
தூண்டியெழும் பெருந்துயரால்
துவள்கின்றோம் எந்நாளும்
என்றும் நீ எம் நெஞ்சில் நின்றிடுவாய்
நிழலெனவே
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை
இறைஞ்சும்

அப்பா, அம்மா, தம்பிகள்,
டினேஸ், டெனிக், பேத்திமார்,
மாமன்மார், மாமிமார், பெரிய தந்தை,
பெரியதாய், மற்றும் உறவினர்கள்,
மயிலிட்டி. (4421)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு

**பொருள்:**

அரசனிடம் சென்று தன் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான செயலைப்பற்றித் தூது உரைப்பவன் திறம், நூலறிந்தவருள் நூல் வல்லவனாக விளங்குதல் ஆகும்.


# உதயன்

உண்மை - விஞ்ஞானம் - தனி நீதி

இல:-398/1, கஸ்தூரியார் வீதி, தொலைபேசி: 24806
யாழ்ப்பாணம். 23078
16-06-988 உ.பே: இல:28


## கவனத்தில் எடுக்க வேண்டியது

வன்செயல்கள், குழப்பங்கள் மத்தியிலும் ஏழு மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தி முடித்துவிட்டார் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன. மக்கள் அச்சத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையிலும் தேர்தலை நடத்தி, ஆளும் கட்சிக்கே — தனது கட்சிக்கே — மக்கள் ஆதரவு உண்டு என்பதையும் காட்டிவிட்டார்.

எஞ்சியுள்ள வடக்குக் கிழக்கு மாகாண சபையின் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் இப்போது ஜனாதிபதி ஜே. ஆருக்கு அக்கறை. இந்தப் பின்னணியில் அடுத்த மாதமளவில் வடக்குக் கிழக்கின் தேர்தலை நடத்த முடியும் என்று கொழும்பு வந்தவேளை இந்திய அமைச்சர் திரு கே. சி. பந்த் நம்பிக்கை தெரிவித்துப் போயிருக்கிறார்.

ஆனால் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் தேர்தலைப் பற்றி நினைத்துப் பார்க்கவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதே நிதர்சனமானது. இப்பகுதிகளில் ஓரிரண்டு வாரங்களுக்குத் தங்கி நிற்கும் வெளியார் எவரும் இதனை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட தமிழ்ப் போராளிகள் இயக்கங்களில் ஒன்று. ஒப்பந்தப் பிரகாரம் ஆயுதங்களையும் ஒப்படைத்துவிட்டு, ஜனநாயக வழிக்குத் திரும்ப முடிவு செய்த இயக்கம் அது. அதன் தலைவர் திரு. க. உமாமகேஸ்வரன், இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை நேரில் சந்தித்துப் பேசியவர்.

ஆகையால் திரு உமாமகேஸ்வரன் வலியுறுத்தி இருக்கும் உண்மை நிலையைப் பிரதிபலிக்கும் கருத்துக்களை ஸ்ரீலங்கா அரசும், இந்திய அரசும் கவனத்தில் கொள்வது நல்லது.

1983 இல் இருந்து வடக்குக் கிழக்கில் இராணுவ ஆட்சி நடக்கிறது. அந்தச் சூழ்நிலையில், இராணுவ நிர்வாக அமைப்பின் கீழ் தேர்தல் நடத்துவது என்பது வெறும் கண்துடைப்பாக முடியும். பொம்மை நிர்வாகம் ஒன்றை நிறுவுவதற்கே அது உதவும். ஆகையால் தேர்தல் சுமுகமான ஒருசூழ்நிலையிலேயே நடத்தப்பட வேண்டும்.

இதுவே திரு. உமாமகேஸ்வரனின் கருத்து. இந்தக் கருத்துச் சிந்திக்கப்பட வேண்டியது. ஸ்ரீலங்கா, இந்திய அரசுகளின் கவனத்தை ஈர்க்க வேண்டியது.

தேர்தலை நடத்துவதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்க அவர் தெரிவித்திருக்கும் ஐந்து அம்சத் திட்டமும் கவனிக்கப்பாலது.

★ இந்தியா முன் நிபந்தனையின்றி யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசுவது. ★ இராணுவ நிர்வாக அமைப்பை நீக்கி இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குதல் ★ இடைக்கால நிர்வாகத்தின் மேற்பார்வையில் வாக்காளர் இடாப்பை ஒழுங்குபடுத்துதல். ★ இடம்பெயர்ந்த அகதிகளை சொந்தப் பிரதேசத்தில் குடியேற்றுதல், திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துதல். ★ சிறுபான்மை இன மக்களின் அடிப்படை உரிமை, மொழிஉரிமைகளை உறுதி செய்யும் விதத்தில் அரசமைப்புக்குத் திருத்தம் கொண்டு வருதல்.

நியாயமான, சுதந்திரமான தேர்தலை வடக்கு கிழக்கில் நடத்த இந்த அம்சங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். அப்போதே தேர்தல் நடைமுறைச் சாத்தியமாகும்.

இவ்வாறு செய்யாமல், அவசரப்பட்டு வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தினால், சனநாயகத்தை மீள்விப்பது கடினம். உண்மையான மக்கள் நிர்வாகத்தை உருவாக்குவதும் சிரமமாகவே இருக்கும். குழப்பங்களும், அடக்கு முறையும் தொடர்ந்து, அமைதியைத் தலை நீட்டிப்பார்க்கவும் விடாமல் துரத்திவிடும் ஆபத்து உருவாகக் கூடும்.

## பட்டம் சூட்டும் விழா

வட்டுக்கோட்டை, ஜூன் 16

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த சிற்பசிகாமணி திரு. சி. செந்தூர்ராசாவுக்கு "சிற்பக்கலாநிதி" என்னும் பட்டம் இன்று வியாழக்கிழமை சூட்டப்படும்.

அளவெட்டி நாகேஸ்ஸ்ரீவரம் நாகவரத நாராயணர் தேவஸ்தான புனராவர்த்தனப்பிரதிஷ்டா கும்பாபிஷேக விழாவில் இது இடம்பெறும்.

வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் பட்டம்வழங்கிபொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

(இ-161)

அமெரிக்க அரசியல்:

# ஜனநாயகக் கட்சி பதவிக்கு வந்தால் நட்சத்திரப்போர்த்திட்டம் ரத்து!

## ஜனாதிபதி வேட்பாளர் டுகாகிஸ் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 15

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நட்சத்திரப் போர்த்திட்டத்தை உடனே ரத்துச் செய்து விடுவேன்.

ஜனநாயகக் கட்சிவேட்பாளரான திரு மைக்கல் டுகாகிஸ் நேற்று முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது.

அத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனம் திரு. மைக்கல் டுக்காகிஸுக்குக் கிடைப்பது நிச்சயமாகி விட்டது. அட்லாண்டா மாநிலத்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜனநாயகக் கட்சி மாநாட்டில் திரு. டுகாகிஸ் நியமனம் உத்தியோபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் மசாசுசெட்ஸ் ஆளுநராக தற்போது விளங்கும் திரு. டுகாகிஸ் நேற்று வெளியுறவுக் கொள்கை பற்றிய முக்கிய பேச்சை நிகழ்த்தினார்.

அப்போது திரு. டுகாகிஸ் சொன்னதாவது;

நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பட்டால் அதிபர் றேகனின் திட்டமான நட்சத்திரப் போர்த் திட்டத்தை உடனே ரத்துச் செய்து விடுவேன்.

அதற்கு பதில் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவேன்.

மரபு வழி ஆயுதங்களை நவீனமயப்படுத்துவதாக புதிய திட்டம் இருக்கும்.

அதிபர் றேகனின் எம் எக்ஸ் ஏவுகணைத் திட்டத்தையும் நான் எதிர்க்கின்றேன்.

சோவியத் டாங்கி ஏவுகணைகளை எதிர்க்கக்கூடிய டாங்கி ஏவுகணைத் தயாரிப்பில் ஈடுபடுவதே நட்சத்திரப் போர்த்திட்டத்துக்கான பதில் நடவடிக்கையாக அமைய வேண்டும்.

இப்படி திரு டுகாகிஸ் தெரிவித்தார்.

7 ஆயிரத்து 500 கோடி டாலர் செலவில் நட்சத்திரப்போர்த் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அதிபர் றேகன் தீவிரமாக ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

[எ]

## ஸியாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளுடன் ஜுனேஜோ கூட்டு!

இஸ்லாமாபாத், ஜூன் 15

நாடாளுமன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாவிட்டால் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து இயக்கம் நடத்தப்போவதாக பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் முகமட்கான் ஜுனேஜோ அறிவித்திருக்கின்றார்.

அவர் செய்தியாளரிடம் சொன்னதாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்தில் இருந்து 90 தினங்களுக்கு இடையில் ஜனாதிபதி ஸியா-உல்ஹக் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடவேண்டும்.

தாமதப்படுத்தப்பட்டால் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து இயக்கம் ஒன்றை நடத்த நடவடிக்கை எடுப்பேன்.

இதற்காக மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோவுடனும் பேச்சுக்கள் நடத்துவேன்.

இப்படி ஜுனேஜோ சொன்னார்.

## அமைதிப் பேச்சின் தோல்விக்கு காரணம் அமெரிக்காவே! நிக்கரகுவா குற்றச்சாட்டு

நியூயார்க், ஜூன் 15

அமைதிப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததற்குக் காரணம் அமெரிக்க அரசே என்று நிக்கரகுவா அரசு குற்றஞ் சாட்டியிருக்கிறது.

ஐ நா பொதுக் கூட்டத்தில் பேசுகையில் நிக்கரகுவா அரசின் பிரதிநிதியான வெளியுறவு உதவி அமைச்சர் இக்குற்றச் சாட்டை விடுத்தார்.

அரசுடன் அமைதி உடன்பாட்டுக்கு வரக் கொன்றாக் கிளர்ச்சியாளர் தயாராக இருந்தனர்.

ஆனால் உடன்பாட்டுக்குச் செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா தான் அவர்களை நிர்ப்பந்தித்தது.

## உணவு உற்பத்தியில் ஈடுபடாத விவசாயிக்கு ஊக்குவிப்புப்பணம்! பிரிட்டிஷ் அரசு அறிவிப்பு

லண்டன், ஜூன் 15

பிரிட்டனில் உணவு உற்பத்தி தேவைக்கு அதிகமாகப் போய்விட்டது என அறிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டாம் என்று விவசாயிகளுக்கு பிரிட்டிஷ் அரசு வேண்டுகோளுடன், உணவு உற்பத்தியில் ஈடுபடாதிருக்கும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படவுள்ளது. இதற்காக 104கோடி ரூபாவை (இலங்கைப் பணத்தில்) பிரிட்டன் ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் உள்ள விவசாய நிலங்களில் 20 சதவீதமானவற்றிலதான் உணவு பயிரிடப்படவேண்டும்! ஏனைய நிலங்களில் உணவு உற்பத்திக்கு சம்பந்தப்படாத பயிர்கள் பயிரிடப்படவேண்டும். இத்திட்டத்தின்கீழ் அரசுடன் ஒத்துழைக்கும் விவசாயிகளுக்கே இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

இப் பணத்தின் பெரும் பகுதியை ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு பிரிட்டனுக்கு கொடுத்து உதவ முன் வந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உணவு உற்பத்தி தேவைக்கு அதிகமாக இருப்பதைக் கட்டுப்படுத்தவே ஐரோப்பிய பொருளாதார சமூகம் இந்த நிதி உதவியை அளிக்கின்றது.

(எ)

### ரஜீவுடன் பேச மூப்பனார் டில்லி விஜயம்

சென்னை, ஜூன் 15

தமிழக அரசியல் நிலைமை பற்றி பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேசுவதற்காக திரு. கருப்பையா மூப்பனார் நேற்று புதுடில்லி பயணமானார்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவரான திரு. மூப்பனார், சட்டசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா? இன்னொரு கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதா? என்பது பற்றி பிரதமருடன் விவாதிப்பார் என்று தெரிகிறது.

(ஒ-எ)

### வெளிஉலகில்

## தொடரும் கொலைகள்

சண்டிகார், ஜூன் 15

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு எட்டுப் பொதுமக்கள் சீக்கிய தீவிர்வாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். என்று அறிவிக்கப்படுகிறது.

அமிர்தசரஸ் அருகில் ஒருதம்பதியினர் சுட்டுக் கொல்லப்பட்டனர் [எ]

## இன்று அலஹபாத் இடைத்தேர்தல்

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவில் எட்டு மாநிலங்களில் 11 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 7 லோகசபைத் தொகுதிகளுக்கும் வியாழன் இடைத்தேர்தல்கள் நடைபெறுகின்றன

இவற்றில் அலஹபாத் நாடாளுமன்றத்தொகுதி இடைத்தேர்தலே உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது (எ)

# கந்தரோடைப் பகுதியிலும் கோமாரி பரவுகிறது

## நோய்ப்பிரதேசமாக பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கந்தரோடை பகுதியிலும் சில கால்நடைகளுக்கு "கோமாரி" நோய் கண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இந்தப் பகுதியும் கால்நடைத் தொற்று நோய் பகுதியாக தெல்லிப்பழைபகுதி மிருக வைத்தியரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தெல்லிப்பழை மிருக வைத்தியர் திருமதி சுகனதேவி தனபாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கந்தரோடைப் பகுதியில் கால்நடைகளுக்கு இந்நோய் இருப்பது நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நோயினால் ஏற்கனவே இப்பகுதியில் ஒரு மாடு இறந்து விட்டது. மேலும் சில மாடுகளில் குறிப்பாக 2 மாடுகளில் இந்நோய் காணப்படுகிறது.

இதன் காரணமாக கோமாரி தொற்று நோய்ப் பகுதியாக கந்தரோடை பகுதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொற்றுநோய்ப் பகுதியின் எல்லைகளாக வடக்கே மல்லாகமும், கிழக்கே சுன்னாகமும், தெற்கே உடுவிலும், மேற்கே அளவெட்டியும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த பகுதிகளுக்குள் கால்நடைகள் கொண்டு வரப்படுவதும், இந்தப் பகுதிகளிலிருந்து வெளியே கால்நடைகள் கொண்டு செல்லப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தநோய் கோண்டாவில் பகுதியில் பரவியுள்ளதும் கோண்டாவில் பகுதி தொற்று நோய்ப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதும்தெரிந்ததே. (இ-9

## ஓய்வூதியம் பெறுவோர், சிறந்த அறிவுரைகளை வழங்க முடியும்

நெடுந்தீவு, ஜூன் 16

பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றித் தாம பெற்ற அனுபவங்களைக் கொண்டு இத்தீபகத்தின் வளர்ச்சிக்கு ஒய்வூதியம் பெறும் ஒவ்வொருவரும் சிறந்த அறிவுறுத்தல்களை நல்க முடியும்.

நெடுந்தீவு ஓய்வூதியம் பெறுவோர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் சிறப்புரை நிகழ்த்திய நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத் தலைவர் திரு நா இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. க. அந்தோனிப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்கத்தின் பதிவுச் சான்றிதழைக் கையளித்து நெடுந்தீவு பிராந்திய கூட்டுறவுச் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஞா. கேதீஸ்வரன் உரையாற்றினர்.

நெடுந்தீவு திருக்குடும்பக் கன்னியர் மடத் தலைவியும் றோ க. மகளிர் வித்தியாலய அதிபருமான சங். சகோதரி மேரிவலன்ரினவும் உரையாற்றினர்கள்.

சங்கத்தின் பொருளாளர் திரு. சி. தில்லையம்பலம் நன்றியுரை கூறினர்.

[இ-111]

## மீண்டும் "ஆலாபனா"

தகுந்த சூழ் நிலைகள் இல்லாத காரணத்தால் பல மாதங்களாக நடைபெறாதிருந்த "ஆலாபனா" கர்நாடக சங்கீத சபாவின் மாதாந்த இசை நிகழ்ச்சிகள் இம் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை முதல் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஒரு நிகழ்ச்சி வீதம் நடைபெறும்.

ஆலாபனாவின் அமைப்பாளர் திரு ஏ. கே. கருணாகரன் இதனைத் தெரிவித்தார் 18ம்திகதி பி.ப.4.45இற்குசெல்வன் மதனாகரன் தயாபரனின் புல்லாங்குழல் நிகழ்ச்சியும் பி. ப. 5-30க்கு திரு. எஸ். பத்மலிங்கத்தின் பாட்டுக் கச்சேரியும் நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

[இ]

### கும்பாபிஷேகம்

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேக விழா இன்று வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (இ-161)

### இலவச அப்பியாச கொப்பிகள்

சுன்னாகம், ஜூன் 16

மானிப்பாய் பிரதேசத்திலுள்ள பதிவேழு பாடசாலைகளில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு, மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தினர் இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கினர்.

லயன்ஸ் கழக மாதர் அணியினரால் வழங்கப்பட்ட இந்த அன்பளிப்பால் சுமார் ஐநூறுகுடும்பங்களைச் சேர்ந்த 900 பிள்ளைகள் பயனடைந்துள்ளனர்.

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் ஏற்கனவே நவாலியில் அனாதை பிள்ளைகளுக்கு கட்டில்களையும் அகதிகளுக்கு உடுபுடவைகளையும் விநியோகம் செய்தனர்.

(இ-27)

## "குரு பூசைகள் மூலம் குருமாரை நினைவு கூருகிறோம்"

மானிப்பாய், ஜூன் 16

"குருபூசைகள நடத்துவதன் மூலம் பெரியோர்களையும் குருமார்களையும் நாம் கௌரவிக்கின்றோம். அவர்கள் காட்டிய பாதையை நினைவு கூருகிறோம். அதன் வழி நடந்து நற்பேறு அடைய முயல்கிறோம்,,

மானிப்பாய்மெமோறியல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் உரையாற்றிய அதிபர் திரு வி. பொன்னுத்துரை இவ்வாறு கூறினார்.

தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். ஸ்ரீ தயாளன், திரு. பாலரத்தினம் ஆகியோரும் திருஞானசம்பந்தர் பெருமை பற்றி கதாப்பிரசங்கம் செய்தனர்.

மாணவரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

[இ 90]

### மகோற்சவ ஆரம்பம்

புங்குடுதீவு ஜூன் 16

புங்குடுதீவு மேற்கு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

20 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் பச்சைசாற்றுதலும் 22 ஆம் திகதி ஆனி உத்தரம் தீர்த்தோற்சவமும், 23 ஆம் திகதி வைரவர்பொங்கலும் இடம் பெறும். (இ-131)

# கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் நாளை கும்பாபிஷேகம்

கிளிநொச்சி ஜூன் 16

அருள்மிகு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

இன்று வியாழக்கிழமை அதிகாலை மேற்படி ஆலயத்தில் அடியார்களால் எண்ணைக் காப்புச் சாற்றும் வைபவம் இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை கும்பாபிஷேகம் ஆரம்பமாகும். நண்பகல் அடியார்களுக்கு அன்னதானமும், இரவு சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும்.

தொடர்ந்து நாற்பத்தி நான்கு நாட்கள் வரை இவ்விழா நடைபெற்று நாற்பத்தி ஐந்தாம் நாள் பண்டலாபிஷேக பூர்த்தி நடைபெறும்.

வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு கிளிநொச்சியிலுள்ள சகல சைவ ஆலயங்களிலிருந்தும் பஜனைக் குழுக்கள் புறப்பட்டு வீதி, வீதியாகப் பஜனை செய்தவண்ணம் ஆலயத்தை வந்தடையும்.

இதற்கான ஒழுங்குகளை கிளிநொச்சி திருநெறிக் கழகம் மேற்கொண்டுள்ளது. (இ)

## திருமலை விநாயகர் ஆலய குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 16

திருகோணமலை உவர்மலை தென்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் ஆலய குடமுழுக்கு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டை செய்யப்படும் விநாயகப் பெருமானின் விக்கிரகம்சிவன் கோயிலில்இருந்து இன்று வியாழன் காலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா, பிரம்மஸ்ரீ மு பத்மநாபசர்மா ஆகியோர் பிரதிஷ்டாகுருக்களாக இருப்பர். இந்த ஆலயத்தின் நிர்வாகத் தலைவராக சுவாமி சந்திரதேவா செயல்படுகிறார். இவர் ஓர் அமெரிக்க திருமலையின் சைவ சமயப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி
பெனரஸ்
காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

# உதயன்

16 - 06 - 1988 வியாழக்கிழமை

சேட்டிங், சூட்டிங்கிற்
குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

சங்கானை வடிசாலை சமாசம்

## பதவி வெற்றிடம்

வடிசாலை முகாமையாளர் (பயிற்சியாளர்)

மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்த ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை:-
இரசாயனவியலில் சிறப்புப் பட்டதாரி.
வயதெல்லை:- 25—40 வரை.
சம்பள அளவுத் திட்டம்:-
நேரில் பேசித் தீர்க்கப்படும்.
நியமனம்:-
6 மாத காலம் பயிற்சியின் பின் 1 வருட கால தகுதிகாண் நிலையில் நிரந்தர நியமனம் செய்யப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர். சங்கானை வடிசாலை சமாசம், மே/பா, தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் சங்கானை என்ற முகவரிக்கு 25-06-88ம் திகதி 12 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்.
சங்கானை வடிசாலை சமாசம்
சங்கானை.

14-6-88 [4462]

ஓம் சாயிராம்

## முதலாவது பிறந்த நாள்

★ வாழ்த்து ★



செல்வி சண்முகராஜா கிரிதரணி

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகராஜா ராஜமனோகரி தம்பதிகளின் செல்வப்புதல்வி கிரிதரணி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (16-6-88) வியாழக்கிழமை கொக்குவில் இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார். அவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தி, சின்னம்மா, நாவற்குழியைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், மாமிமார் மட்டக்களப்பு பெரியப்பா, பெரியம்மா ஜனக்கா, கோபன் தம்பி மற்றும் மாமா, மாமி, அம்மு மச்சான், நிரோஷன் மச்சான் (லண்டன்) பிருத்தாக்கா குப்பிழான் அம்மம்மா, குடும்பத்தினர் உற்றார், உறவினர் எல்லோரும் கிரிதரணியை பகவான் அருள் பெற்று சகல செல்வங்களுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். சுபம்

ஸ்ரீ வாசம்,
கொக்குவில் கிழக்கு.
(4428) கொக்குவில்.

மங்களகரமான

## திறப்பு விழா

மக்கள் மனதில் நிலையான
அன்பையும் ஆதரவையும் பெற்ற

## ஸ்ரீ கிருஷ்ண பவான்

(சைவ ஹோட்டல்)

மீண்டும்
புதுப் பொலிவுடன் உங்களுக்கு

16 - 06 - 1988

வியாழக்கிழமை தொடக்கம்
தனது சேவையை
ஆரம்பிக்கின்றது.

✶ மனதிற்கு பிடித்தமான உணவு வகைகள்
✶ அன்பான உபசரிப்புக்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

171, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5479)

விற்பனை நிலைய மாற்றம்

## Sakura Photo Suppliers
சகுரு போட்டோ சப்ளையர்ஸ்

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எதிர்வரும் 17ஆம் திகதி (17-06-1988) வெள்ளிக்கிழமை தொடக்கம் எமது விற்பனை நிலையத்தை யாழ் பஸ் நிலைய முன் பாகவுள்ள இலக்கம் 14, யுபிலி பசாரில் (ராணி சினிமா அருகாமை) இடம்மாற்றியுள்ளோம்.

Konica கலர் பிலிம்ஸ் பிறின்டிங் பேப்பர் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

கொம்பியூட்டர் மூலம் சிறந்த முறையில் கலர் பிலிம் Processing செய்து ஒரு கிழமையில் கொடுக்கப்படும்.

Sakura Photo Suppliers,
14, Jubilee Bazaar, JAFFNA.
[4283]

காணி, வீடு, விற்கவும் வாங்கவும்
காணி மீதான ஈட்டுக்கடன் வசதிகளுக்கும்
நிதானமான திருமண சேவைகளுக்கும்
"லாலா அசோசியேட்ஸ்"

''பதிவு பெற்ற காணி ஒப்பந்தக்காரர்களும், ஏலவிற்பனையாளர்களும்,

185/9, கஸ்தூரியார் வீதி,
(முதலாம் மாடி) ''நியூ லலிதா பில்டிங்''
யாழ்ப்பாணம்.

(அனுமதிக்கப்பட்ட 1½ /- (18) வீதமே
(4267) கமிஷனாக அறவிடுகின்றோம்.

## வதந்திகளை நம்பாதீர்கள்

அகில இலங்கை இந்திய மலேசிய புகழ் தவில் மாமேதை கைதடியூர் K. பழனிமலை அவர்கள் பிரபல நாதஸ்வர வித்துவான்கள் சகிதம் கச்சேரி நடாத்தி வருகிறார் என்பதை அறியத்தருகிறோம். திருவிழாக்கள் திருமண வைபவங்கள் புதுமனைப்பிரவேசங்கள்போன்ற நிகழ்ச்சிகளுக்கு K. பழனிமலை குழுவினரை அழைத்து அவர்கள் கச்சேரியை கேட்டு மகிழுங்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

K. கேதீஸ்வரன்
அஞ்சல் அலுவலகம்,
கைதடி.

K. பழனிமலை
கண்டி வீதி,
கைதடி.

K. பழனிமலை
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(4606)

# 4 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் ஜூலை 14இல்

கொழும்பு, ஜூன் 16

கெக்கிராவ, கட்டுகம்பளை, இரத்தினபுரி, வெலிமட ஆகியநான்கு மன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல்கள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று அறிவித்தார்.

இந்த இடைத்தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்றுக்காலை அந்தந்த மாவட்டக் கச்சேரிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நான்கு தொகுதிகளிலும் ஐ. தே. க. சுதந்திரக் கட்சி ஆகியன போட்டியிடுகின்றன 22 சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

கட்சிரீதியிலான வேட்பாளர் விவரம் வருமாறு:

வெலிமட:- ரவீந்திரா சமரவீர- ஐ. தே. க. பந்துலு பண்டாரா- (சு. க) சுயேச்சை வேட்பாளர்— 03

இரத்தினபுரி:- எஸ்,பி. புஞ்சிநிலமே-(ஐ.தே.க.) நந்தா எல்லாவல-(சு.க.) சுயேச்சை வேட்பாளர்- 08

கெக்கிராவை:- எல்.டி. கமகே- (ஐ. தே. க.) ஜே.எம். அதிகாரி- (சு.க.) சுயேச்சை வேட்பாளர்- 05

கட்டுக்கம்பளை:- யு.எஸ். எம். தஸநாயக- (ஐ. தே. க.) ஏ. கே. யாப்பா- (சு. க.) சுயேச்சை வேட்பாளர்- 06 (ஒ-எ)

## திருமந்திர விரிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 16

'திருமந்திரச் செம்மல் சி இராமநாதன் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள தெய்வீகத் திருக்குறள் இளைஞர் மன்றத்தின் பணிமனையில் தினமும் பிற்பகல் 3 30மணி முதல் 5.30 மணிவரை திருமந்திர விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

வடக்கு - கிழக்கு பொது ஸ்தாபனங்களின் மன்றக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டம் மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறும். (ஒ-9)

## சிவாஜி..

நலனை வேண்டியும்-

இலங்கையில் இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கையை ஆட்சேபித்துமே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது. (ஒ-எ)

## மன்னாரில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறவேண்டுமாயின் இந்திய அமைதிப் படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தையில் இறங்கி, இணக்கம் காண வேண்டுமென்றுகோரியே இப்போராட்டம் நடத்தப்பட்டுவருகிறது.

ஈழப் புரட்சி அமைப்பின் மன்னார்ப் பொறுப்பாளர் திரு. அமல் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது

ஈழவர் முன்னணியின் சார்பில் திரு. எட்வேட், ஈழப் புரட்சி அமைப்பின் பிரதிநிதிகளான திருவாளர்கள் பத்மன், சில்வா, பாலா ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினார்கள் (ஒ-எ)

## வெள்ளைக்கொடி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் வெற்றியளித்தாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

அங்கும்வீடுகள், கடைகள்,வாகனங்கள்தோறும் வெள்ளைக் கொடிகளைக் கட்டிமக்கள்சமாதானப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்

இதேவேளை, வெள்ளைக் கொடி தினமான நேற்று யாழ். நகரில் அமைதிப் படையினரின் ரோந்து குறைவாகவே இருந்ததை அவதானிக்க முடிந்தது (ஒக-5-9)

## பட்டதாரி..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரியவருகிறது.

விஞ்ஞான ஆசிரியர் நியமிக்கப்படவுள்ள மாவட்டங்கள்வருமாறு:

பண்டாரவளை, அம்பாறை, அனுராதபுரம், தங்காலை, கேகாலை, கண்டி, குளியாப்பிட்டி, களுத்துறை, மொனறாகலை, மாத்தளை, பொலனறுவ, இரத்தினபுரி, கல்முனை, மட்டக்களப்பு, ன்னார், நுவரெலியா, நிக்கவரெட்டியா [ஒ-எ]

## பிரதமர்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமர் திரு ராஜீவ் காந்தி உடனடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒரு சமாதானத் தீர்வைக் கொண்டு வரவேண்டும்.

ஊமைகளாக இருந்த மக்கள் தற்பொழுது ஒருமனதாக வெளிப்படுத்திய உணர்வுகளை இந்திய அரசின் கவனத்திற்கு இந்திய அமைதிப் படையினர் கொண்டுவருவார்கள் என்றும் நான் எதிர்பார்க்கிறேன் —என்றார் (அ-ஒ-10)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 7688 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

23-6-88 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
15-6-88
(C. 5475)

## தடுப்பு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வது என்பது இயலாத காரியமாகும். எனவே குறிப்பிட்ட சில இடங்களான நோய் தொற்றிய இடங்களைச் சுற்றியே முதற்கட்டமாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்.

இதன்படி அடுத்த சில தினங்களில் திருநெல்வேலிப்பகுதியில் எமது முதலாம் கட்ட தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளோம் என்று அவர் தெரிவித்தார் [ஒ-9]

## பாடசாலை அபிவிருத்தி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்16

ஆனைப்பந்தி மெ. மி த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. இ. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

● மரண அறிவித்தல்கள் ●

## திருமதி குகனேஷ்வரி தங்கவடிவேலு

B. A (Ceylon)

திருமதி குகனேஷ்வரி தங்கவடிவேலு சிறுவர் நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரி யாழ்ப்பாணம் 15-6-88ல் காலமாகிவிட்டார். இவர் நில அளவையாளர் பொ. தங்கவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி பொன்னம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், குப்பிளானைச் சேர்ந்த திரு. திருமதி பொன்னுத்துரை அவர்களின் அன்பு மருமகளும், சியாமளாவின் அன்புத் தாயாரும், லதா, சுமதியின் சிறிய தாயாரும். இராஜேஸ்வரி (நோர்வே) கமலேஸ்வரி, லோகேஸ்வரி, சிவனேஸ்வரி (புடைவைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்) பாலகிருஷ்ணன் (டென்மார்க்) சிவானந்தன், முருகானந்தன் (லங்கா சீமெந்து லிமிட்டட்) மணிவாசகர் (டெமொன்ஸ்ரேற்றர். யாழ் பல்கலைக்கழகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமானந்தம், இராசதுரை (ஜேர்மனி) மகேந்திரன், சத்தியபாமா (டென்மார்க்) வதனி, வளர்மதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று ஈமக்கிரியைகளுக்காக 16-6-88 வியாழக்கிழமை பிற்பகல் 3,00 மணிக்கு தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொளகிறோம்.

தகவல்:
பொ. தங்கவடிவேல்
சுதுமலை மத்தி மானிப்பாய். [4464]

## செபமாலை ஜிம்பிறவுண்

(புனித சாள்ஸ் மகா. வி. பழைய மாணவன்)

செபமாலை ஜிம்பிறவுண் காலமானார். இவர் திரு. திருமதி செபமாலை தர்மராசா ஜேட்றூட் தம்பதிகளின் அருமைப்புதல்வனும், ஜெனார்த்தினி, தர்சினி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புனித சாள்ஸ் பழைய மாணவர்
(4465)

## திரு. வைத்திலிங்கம் முருகேசு

[உரிமையாளர்]
[இலட்சுமிபவான் கபே, டிப்போவடி, கோண்டாவில்].

திரு. வைத்திலிங்கம் முருகேசு 15-06-88 இல் காலமானார். இவர் இராசேஸ்வரியின் அன்புக்கணவரும், இலங்கைராஜன், இளையராசா, இளவரசியின் அன்புத்தந்தையுமாவர். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. இராசரத்தினம்
கோண்டாவில்.
[4466]

## சு. பெ. மு. கனகசபாபதி

வியாபாரிமூலை பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் கண்டி, மாத்தளை பிரபல வர்த்தகரும் ஆகிய சு. பெ. மு கனகசபாபதி அவர்கள் நேற்று புதன்கிழமை (15-06-88) அன்று காலமானார். அன்னார் பதுமாவதியின் அன்புக்கணவரும், குமரகுரு, ரகுநாதன் Doctor - Colombo G. H.), சுந்தரேசன், பாஸ்கரன், மோகனதாஸ், கிருபாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குருநாதன் (Engineer-Nigeria) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற சௌந்தராம்பிகை கனகசபாபதி; செல்வநாயகி கந்தநயினார் ஆகியோரின் சகோதரனும் ஆவர். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11. 00 மணியளவில் பருத்தித்துறை மயானத்தில் நடைபெறும். [4463]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road. Jaffna on Thursday, 16th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org